சுருக்கம்

தமிழ் இணையப் பல்கலைக் கழகம்–1 ஆம் வகுப்பு முதல் 6 ஆம் வகுப்பு வரையிலான பாடத்திட்ட அங்கீகாரம் வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (க்யு.2) துறை

அரசாணை (நிலை) எண்.300 | நாள்.20.12.2007

படிக்கப்பட்டவை

1) தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித எண். 25653/ஜே2/2007, நாள் 9.08.2007 மற்றும் 03.09.2007.
2) ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் கடித எண். 16397/ஈ2/2007, நாள் 27.11.2007.

*****

**ஆணை**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் 1 முதல் 6–ம் வகுப்புக்கு நிகரான தமிழ் பாடங்கள் முடிவு செய்யப்பட்டு, வல்லுநர்களால் எழுதி வடிவமைக்கப்பட்டு, இணையத்தில் இடப்பட்டுள்ளதாகவும், இப்பாடத்திட்டத்திற்குத் தமிழக அரசின் ஆரம்பக் கல்வித்துறையின் அங்கீகாரம் வழங்க ஆவன செய்யுமாறு தமிழ் இணையப் பல்கலைக் கழகம் மற்றும் தமிழ் மொழி மேம்பாட்டுத் தலைவர் கோரியுள்ளதாகவும், தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள 1 முதல் 6–ம் வகுப்புக்கான பாடத் திட்டத்தினை ஆய்வு செய்து பாடநூல் வல்லுநர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு ஆய்வு அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றும் சிறப்புகள் வாய்ந்த, தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் பாடத்திட்டம் மற்றும் இணைய வழிப் பாடங்களுக்கு அரசின் உரிய அங்கீகாரம் வழங்குமாறும் தொடக்கக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் கடிதத்தில் தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் ஒன்று முதல் ஆறு வகுப்பு வரையிலான சான்தறிதழ் கல்விக்குரிய அடிப்படை நிலைப் பாடங்களுக்கு, தமிழாசிரியர்கள், கல்வியாளர்களைக் கொண்டு குழு அமைக்கப்பட்டு மேலாய்வு மேற்கொள்ளப்பட்டது என்றும், மேற்படி தமிழ் பாடத் திட்டம் மற்றும் பாடங்கள் அயல் நாட்டுத் தமிழர்கள் படித்துப் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன என்று மேற்படி குழு தெரிவித்துள்ளது என்றும் மேற்படி திட்டத்தை ஏற்கலாமென்றும் கருத்து தெரிவித்துள்ளார்.

3. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவையும் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் கருத்துருவையும் அரசு நன்கு பரிசீலித்து சிறப்புகள் வாய்ந்த தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் சான்றிதழ் கல்விக்குரிய தமிழ் பாடத் திட்டம் மற்றும் இணைய வழிப் பாடங்களுக்கு அங்கீகாரம் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர்,
சென்னை–6
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர்,
சென்னை–6
நகல்
தமிழ் இணையப் பல்கலைக் கழகம்,
தரமணி, சென்னை–600 113.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 20.12.07
20/12